
சிகாகோ மேதின தியாகிகள்

MAY DAY MARTYRS of Chicago



ஆர்.பட்டாபிராமன்

R.PATTABIRAMAN

சிறுவெளியீடு

ஏப்ரல் 2019

சிகாகோ மேதின தியாகிகள்

MAY DAY MARTYRS of Chicago

An Essay about Haymarket Event That Caused

The Commencement of the Historic May Day

Introducing the Working Class Leaders and their Martyrdom

ஆர்.பட்டாபிராமன்

R.PATTABIRAMAN

சிகாகோ மேதின தியாகிகள்

- **சிகாகோ மேதின தியாகிகள்**
- **ஆல்பர்ட் பார்சன்ஸ்**
- **ஆகஸ்ட் ஸ்பீஸ்**
- **அடால்ப் பிஷர்**
- **ஜார்ஜ் எங்கெல்**
- **லூயி லிங்**

சிகாகோ மேதின தியாகிகள்

மேற்கு சிகாகோவின் ஹேமார்க்கெட் சதுக்கத்தில் மே 4, 1886 இரவு கூடியிருந்த தொழிலாளர்களை போலீசார் அச்சுறுத்தி கலைத்துக்கொண்டிருந்தனர். அங்கு டைனமிட் குண்டு வெடித்ததில் போலீஸ்காரர்கள் உயிர்ப்பலியும் காயமும் ஏற்பட்டது. கோபமடைந்த போலீசார் கண்மூடித்தனமாக சுட்டனர். 200க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்து, சிலர் உயிர் இழப்பும் நேர்ந்து அத்துப்பாக்கி சூடு முடிந்தது.

ஹேமார்க்கெட் சம்பவத்திற்கு வழக்கு போடப்பட்டது. கண்துடைப்பு விசாரணை அமைக்கப்பட்டு அதில் ஆல்பர்ட் பார்சன்ஸ், அகஸ்ட் ஸ்பீஸ், சாமுவேல் பீல்டன், மிஷேல் ஸ்க்வாப். அடால்ப் ஃபிஷர், ஜார்ஜ் எங்கெல், லூயி லிங் ஆகிய 7 பேருக்கு மரண தண்டனையும், ஆஸ்கர் நீபேவிற்கு 15 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டது. இரு அம்சங்கள் அப்போது அப்பகுதியில் கவ்வி பிடித்திருந்தன. உழைப்பவர்களுக்கு 8 மணிநேரம் மட்டுமே சட்டபூர்வ வேலை இருக்கவேண்டும். மற்ற ஒன்று புரட்சிகர சோசலிச சிந்தனை. அதிலும் குறிப்பாக அனார்க்கிச செல்வாக்கில் -என்பவை அந்த குறிப்பிடத்தக்க இரண்டு அம்சங்கள்.

8 மணி நேரவேலை இயக்கங்கள் அதற்கு முன்பாக 10 ஆண்டுகளாக பெரும் தாக்கங்களை ஆங்காங்கே உருவாக்கி அமெரிக்காவின் 6 மாநிலங்கள் அதை அங்கீகரித்திருந்தன. ஜூன் 1868ல் பெடரல் சட்டம் என அரசாங்க ஊழியர்களுக்கு மத்திய அரசால் அறிவிக்கப்பட்டும்விட்டது. ஆனால் முதலாளிகளால் அச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படாத சூழலே நிலவியது. அனைத்திற்கும் மேலாக 1876ல் அமெரிக்காவின் உச்சநீதிமன்றம் இச்சட்டத்தை இரத்து செய்துவிட்டது. அரசாங்கம் ஆங்காங்கே தொழிலாளர் இயக்கங்களுடன் இது குறித்து உடன்பாடு போட்டுக்கொண்டால் போதும் என்றது.

AFL American Federation of Labour முன்னோடிகள் கருத்தரங்கு ஒன்றைகூட்டி இனி மே 1 1886 முதல் சட்டரீதியான உழைப்பு எனில் 8 மணி நேரம்தான் என்கிற புகழ்வாய்ந்த தீர்மானத்தை நிறைவேற்றினர். அனைத்து தொழிலாளரையும் இதை நோக்கி அறைகூவல் விடுத்தனர். அமெரிக்காவின் பல்வேறு உழைக்கும் பிரிவினர், பெண்கள், நீக்ரோக்கள், பல நாடுகளிலிருந்து குடியேறியவர்கள் உட்பட ஒரே மேடையில் Federation of Labour, Knights of Labour சார்பில் தொடர் இயக்கங்கள் கட்டினர். தொழிலாளர் பிரசுரங்கள், பத்திரிகைகள் வாயிலாக பிரச்சாரம் மேற்கொண்டனர். இந்த இயக்கங்களில் சிகோகாவில் 4 லட்சம் தொழிலாளர் பங்கேற்றனர். இதில் 10 சத தொழிலாளர்கள் குறைந்த வேலைநேர உரிமையை பெற்றுவிட்டனர்.


சிகாகோ சோசலிஸ்ட் கிளப் என்கிற ஆய்வு மற்றும் போராட்ட மையம் ஒன்றை ஜெர்மனியிலிருந்து குடியேறிய தோழர்கள் நடத்தி வந்தனர். அவர்கள் ஆயுதம் ஏந்தி தொழிலாளர்களை போலிஸ் தாக்குதல் போது காத்தும் வந்தனர். சோசலிஸ்ட் லேபர் கட்சி என்ற பெயரில் குழுவும் அதில் கருத்து மாறுபட்டவர்கள் நியுயார்க்கில் சோசலிஸ்ட் புரட்சிகர கிளப் என்றும் இயங்கிவந்தனர். சிகாகோ கிளப்பில் ஆல்பர்ட் பார்சன்ஸ். ஆகஸ்ட் ஸ்பைஸ் ஆகியோர் வழிகாட்டிவந்தனர். போலீஸ் தாக்குதலை சமாளிப்பது என்பதே பெரும் சவாலாக அவர்களுக்கு இருந்தது.

1883ல் பிட்ஸ்பர்க்கில் அமெரிக்க அனார்க்கிஸ்ட்களின் மாநாடு நடைபெற்றது. மார்க்சின் அகிலம் கலைந்த பின்னர் பிளாக் இண்டெர்னேஷனல் (Black International) நிறுவப்பட்டது. மாநாட்டிற்கு இங்கிலாந்து சேர்ந்த ஜோகன் மோஸ்ட் வழிகாட்டினார். Internationl Working People's Association IWPA தனது மானிபெஸ்டோ ஒன்றை வெளியிட்டது. FORCE is the remedy for the evils of Capitalism என மோஸ்ட் பேசினார். Force என்பதில் பார்சன்ஸ், ஸ்பீஸ்க்கு உடன்பாடு இருந்தாலும் மோஸ்ட் தெரிவித்த தனிநபர் பயங்கரவாத நடவடிக்கைகள் என்பதற்கு பதிலாக போர்க்குணமிக்க தொழிற்சங்கம் என்ற மாற்று கருத்தை முன்வைத்தனர்.


IWPA செல்வாக்கு பெறத்துவங்கியது. சிகாகோவில் 6000 பேர் அதில் உறுப்பினர்களாயினர். அலார்ம் எனும் ஆங்கில பத்ரிகையை பார்சன்ஸ், அர்பெய்டெர் ஜெய்டுங் பத்திரிகை ஸ்பீஸ் பொறுப்பில் வெளிவந்தன. அவை 5000 அளவில் சர்க்குலேஷன் பெற்றன. ஜார்ஜ் எங்கெல் மாதப்பத்ரிக்கை டெர் அனார்க்க்கிஸ்ட் கொணர்ந்தார். Wage system கூலிஅடிமை ஒழிப்பு என்கிற சித்தாந்த பிரச்சனைக்காக நிற்பவர்கள் அனார்க்கிஸ்ட்கள். இப்படி 8 மணி வேலை கேட்டு கூலிமுறையை முட்டுக்கொடுக்கலாமா என்கிற சித்தாந்தம் சார்ந்த கேள்வியும் தயக்கமும் அவர்களுக்கு ஆரம்பத்தில் இருந்தது. முதலாளிகள் காட்டிய கடுமையான எதிர்ப்பும் அடக்குமுறைகளும் அவர்களை தொழிலாளர்களுடன் சேர்த்தது.. வர்க்க இயக்கம் என்பது மெதுவாக முன்னேறும், இதில் தனித்து ஒதுங்கிவிடுவது சரியல்ல என்பதாலேயே 8 மணி இயக்கத்தில் எங்களை இணைத்துக் கொள்கிறோம் என்றார் பார்சன்ஸ். சிகாகோ தொழிலாளர் மத்திய அமைப்பு என்கிற 22 சங்க கூட்டம் ஒன்றில் (1885 அக்டோபர்) ஸ்பீஸ் 'வன்முறைதான் பதில்' என்கிற தீர்மானத்தை முன்மொழிந்தார்."We urgently call upon the wage earning class to arm itself inorder to be able to putforth against their exploiters such an arrangement which alone can be effective: VIOLENCE"

பிப் 16 1886ல் மெக்கார்மிக் அறுவை எந்திர தொழிலாளர் வேலைநிறுத்தம் நடந்தது. 1886 மே 3 அன்று மரம் அறுக்கும் தொழிலாளர் சங்கம் (Lumber Shovers' Union)

6000 தோழர்களை கூட்டியது. இதில் மெக்கார்மிக் மரம் அறுக்கும் தொழிலாளர்களும் கூடினர். அகஸ்ட் ஸ்பீஸ் பேசினார். வேலைநிறுத்தத்தில் பங்கேற்காதவர் வெளிவந்தபோது அவர்களை முழக்கமிட்டு போராட்டக்காரர்கள் உள்ளே துரத்தினர். உடன் 200 போலீசார் அங்கு குவிக்கப்பட்டனர். அறிவிப்பு ஏதும் தராமல் அனைவரையும் தாக்கத்துவங்கினர். வேலைநிறுத்த போராளி ஒருவர் மரணித்தார். பலருக்கு இரத்தம் வழிந்தது. பத்திரிக்கை அலுவலகம் விரைந்த ஸ்பீஸ் தொழிலாளர்களே தற்காத்துக்கொள்ள ஆயுதம் ஏந்துங்கள் என்கிற அறிக்கையை விடுத்தார். அறிக்கை Revenge Circular என பெயரிடப்பட்டு இருந்தது. Working Men! To Arms என்றுதான் ஸ்பீஸ் எழுதி கொடுத்து இருந்தார். பிரஸ்ஸில் இருந்த ஒருவர் ஆர்வ மிகுதியால் ரிவென்ஜ் என அதை மாற்றிவிட்டார்.



அந்த அறிக்கை 2500 எண்ணிக்கை அளவில் விநியோகிக்கப்பட்டுவிட்டது. மறுநாள் போலீசாரின் தாக்குதலை கண்டித்து கூட்டம் ஹேமார்க்கெட் சதுக்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. Arm Yourself Appear Full Force என்கிற அறிவிப்பு போனால்தான் தான் பேச வரமுடியும் என் ஸ்பீஸ் உறுதிபட தெரிவித்துவிட்டார். 20000 துண்டறிக்கைகள் கூட்ட அழைப்பாக கொடுக்கப்பட்டுவிட்டது. அதில் 200-300 அறிக்கைகளில் மேல்கூறிய வரி சேர்க்கப்பட்டிருந்தது. ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் திரண்டனர். நேரம் ஆகஆக கூட்டம் கலையவும் துவங்கியது. இரவு 8.30க்கு ஸ்பீஸ் பேசத்துவங்கினார். அவருக்கு பின்னர் பார்சன்ஸ் பேசினார். சிகாகோ மேயர் கார்டர் ஹாரிசன் இருவர் உரைகளையும் முழுமையாக கேட்டார். நிலைமைகள் மோசமாக இல்லை என உணர்ந்து அங்கிருந்த போலீஸ் அதிகாரி ஜான் போன்ஃபீல்ட் என்பாரிடம் குவிக்கப்பட்ட போலீஸ்களை போக சொல்லிவிடலாம் என அறிவுரை தந்தார்.



. சாமுவேல் பீல்டன் பேச அழைக்கப்பட்டார். மணி இரவு 10யை நெருங்கியது இடியுடன் மழை துவங்கியது. இருந்தவர்களில் பலர் நனையாமல் இருக்க ஒதுங்க ஆரம்பித்தனர். கூட்டம் 200 அளவிற்கு குறைந்துவிட்டது. போலீஸ் அதிகாரிகள் போன்பீல்ட் மற்றும் வில்லியம் வார்டு இருவரும் மேடை நோக்கி செல்கின்றனர். அனைவரும் கலைய உத்தரவிடுகின்றனர். பீல்டன் நாங்கள் அமைதியாக கூட்டம் நடத்துகிறோம் என மறுமொழி தருகிறார். திடிரென வீசப்பட்ட குண்டால் மதியாஸ்டீகன் எனும் போலீஸ் மரணம் அடைகிறார். 70 போலீசார் காயமுறுகின்றனர். போலீஸ் சரமாரியாக சுடுகிறது. எவ்வளவுபேர் இறந்தனர்.-காயமுற்றனர் என்ற கணக்கில்லாமல் இது நடந்தேறியது.

மறுநாள் பரவலாக பத்திரிகைகள் அனார்க்கிஸ்ட், சோசலிஸ்ட், கம்யுனிஸ்ட்கள் சதி என முத்திரை குத்தி எழுதின. தொழிலாளர் குடியிருப்புகளை போலீசார் சூழ்ந்தனர். சோசலிஸ்ட் என அறியப்பட்ட அனைவரும் கைது செய்யப்படுகின்றனர். கூட்ட அறைகள், பத்திரிக்கை அலுவலகங்கள் சூறையாடப்படுகின்றன, சிகாகோ நகர் முழுதும் போலீசாரின் வேட்டை பெரும் பேயாட்டமாக நடந்தேறுகிறது. State Attorney கிரின்னெல் என்பவர் Make the raids first and lookup the law afterwards என பகிரங்க அறிக்கை தருகிறார். மே 27 1886அன்று 31 பெயர்கள் வழக்கில் சேர்க்கப்படுகின்றன,. ஆனால் இந்த 8 பேர் மீது விசாரணை வருகிறது.

வழக்கு ஜோசப் காரி என்கிற கிரிமினல் நீதிமன்ற நீதிபதி முன் வருகிறது. கிரின்னெல்தான் தலைமை பிராசிக்யூட்டர். ஆரம்பத்தில் ஆல்பர்ட் பார்சன்ஸ் ஆஜாராகவில்லை. பின்னர் சேர்ந்துகொண்டார். அவர்கள் நேரிடையாக குற்றம் சாட்டப்பட்ட செயல்களுக்காக விசாரிக்கப்படவில்லை தண்டனை பெறப்போவதில்லை மாறாக கொண்டிருந்த கொள்கைக்காக என்பது வழக்கு விசாரணையில் வெளிப்படையாக தெரியவந்தது.

வழக்கு நாட்களில் மூன்று நாட்கள் போராளிகள் தங்கள் சித்தாந்த உரைதனை தந்தனர். தாங்கள் உழைக்கும் வர்க்கத்தின் பிரதிநிதியாக பேசுவதாகவும், எங்கள் வாயை அடைப்பதன்மூலம் பெருகிவரும் தொழிலாளர் இயக்கங்களை தடுத்துவிட முடியாது என்றனர். ஜூவாலை எங்கும் பரவும் என்றனர். 7 பேருக்கு மரணதண்டனை, ஒருவருக்கு 15 ஆண்டுகள் சிறை என்ற தீர்ப்பை நீதிமன்றம் சொல்லியது. இலியினாயிஸ் உயர் நீதிமன்றத்தில் அப்பீல் சென்றது. அங்கு ஆப்ரகாம் லிங்கனுடன் பணியாற்றிய லியொனார்ட் ஸ்வெட் என்பார் வாதாடினார். கீழ்கோர்ட் தீர்ப்பு செப் 14 1887ல் உறுதி செய்யப்பட்டது. அமெரிக்க உச்சநீதிமன்றத்திற்கு அப்பீல் செல்ல அனுமதி கிடைக்கவில்லை.

AFLO தொழிற்சங்கம் அவர்களுக்கு கிளமென்சி கருணை வழங்கவேண்டும் என தீர்மானம் போட்டது. அதன் தலைவர் சாமுவேல் கோம்பர்ஸ் மற்றும் அமெரிக்காவின் புகழ்வாய்ந்த ராபர்ட் இங்கெர்சால், செனட்டர் மற்றும் நீதிமான் லைமன் ட்ரம்பெல் அமெரிக்கன் பார் அசோசியேஷன் சார்ந்த ஸ்டிபன் கிரிகாரி, முர்ரே துலே, இலியனாயிஸ் தலைமை நீதிபதியாக இருந்த சர்க்யுட் கோர்ட், நிதி செயலராக இருந்த லைமேன் காஜெ, சிறந்த நாவலாசிரியர் வில்லியம் டீன் ஹாவல்ஸ் போன்றவர்களும் தண்டனைகளை நிறைவேற்றவேண்டாம் என வேண்டுகோள் விடுத்தனர். லண்டனில் சோசலிஸ்ட் தலைவர்கள் பெர்னாட் ஷா, வில்லியம் மோரீஸ் 'போராளிகள் பாதுகாப்பு' கூட்டங்களை நடத்தினர். பிரான்ஸ், ஹாலந்து, ருஷ்யா, இத்தாலி, ஸ்பெயின் ஆகிய நாடுகளிலும் கூட்டங்கள் நடைபெற்று பாதுகாப்பு நிதியை தொழிலாளர்களிடம் திரட்டினர்.

கவர்னர் ரிச்சர்ட் ஒகில்ஸ்பிக்கு ஏராள பெட்டிஷன்கள் குவிந்தன. பீல்டன், ஸ்க்வாப் கருணை மனுக்களை போட்டனர். ஸ்பீஸ் மற்றவர்களை விடுவித்து விடுங்கள், என்னை தூக்கில் ஏற்றுங்கள் என விண்ணப்பித்தார். நவம்பர் 11, 1887 தூக்குதண்டனை நாள் குறித்தனர். முதல்நாள் தனது வாயில் குண்டு ஒன்றை வெடிக்க செய்து லிங் தற்கொலை செய்துகொண்டார். பீல்டன், ஸ்க்வாப் தண்டனை மாற்றப்பட்டு ஆயுள்தண்டனையானது. தோழர்கள் பார்சன்ஸ், ஸ்பீஸ், எங்கெல், பிஷர் தூக்கிலிடப்பட்டனர். நண்பர்களிடம் உடல் ஒப்படைக்கப்பட்டது. சிகாகோ கண்டிராத பெரும் ஊர்வலம் 5 லட்சம் தொழிலாளர் மற்றும் மக்கள் திரண்டு 5 கலசங்களுக்கும் (Lingg casket சேர்த்து) அஞ்சலி செலுத்தினர். இறுதி சடங்குகளை 25000 மக்கள் நின்று பார்வையிட்டனர். அவர்களுக்கு நினைவு சின்னம் ஒன்றை ஜூன் 25, 1893ல் வால்டேகிம் கல்லறைஅருகில் அமைத்தனர்.

இலியனாயிஸ் கவர்னராக ஜான் பீட்டர் அல்ட்ஜெல்ட் என்பார் 1892ல் வெற்றி பெற்றார். அவர் ஜூன் 26 1893ல் சிறையில் இருந்த தோழர்களுக்கு மன்னிப்பு வழங்கினார். அன்று இந்த இளைஞர்கள் செய்யாத தவறுக்கு நீதிமன்றம், நிர்வாகத்தின் காழ்ப்புணர்வால் பழிவாங்கப்பட்டுவிட்டனர் என்று தெரிவித்தார்.

சிகாகோ நிர்வாகமோ மறைந்த போலீஸ்காரர்களுக்கு ஆண்டுதோறும் நினவாஞ்சலி செய்து வந்தது. 1968ல் சிகாகோ தினசரி இதை கண்டித்து எழுதியது. எவர் குண்டெறிந்தவர் என நிரூபிக்கப்படாதபோது அவர்களை பயங்கரவாதிகளாக சித்தரித்து தண்டனை தந்தது சரியல்ல என்ற கருத்தை வெளியிட்டது. காலம் கடந்த ஞானத்தால் போன உயிர்கள் மீளப்போவதில்லை.

அக்டோபர் 16 1886 துவங்கி தொடர்ந்து Knights of Labour(தொழிலாளர் காவலர்) அவர்களது போராளிகளின் வாழ்க்கை பக்கங்களை வெளியிடதுவங்கியது. அவை சுயசரிதைகள் என அறிவிப்பு வெளியிட்டது. இத்தோழர்கள் பொறுப்பில் வந்த பத்திரிகைகள் மார்க்சியம் லெனினியம் நூலகம் பெர்லினிலும், அமெரிக்காவில் சில இதழ்களும் ஆய்வாளர்களுக்கு கிடைத்தன. பார்சன்ஸ், பீல்டன் தவிர மற்றவர்கள் ஜெர்மனியை சார்ந்தவர்கள். கொடுமையான முதலாளித்துவ சமூகத்தை அப்புறப்படுத்தி அங்கு அரசாங்கம் என்பதில்லாமல் மக்கள் தங்கள் தேவைகளை சுய விருப்பத்துடன் கூட்டாக பொதுநலம் சார்ந்து தீர்த்துக்கொள்ளும் கனவை கொண்டிருந்தனர். மக்கள் பிரதிநிதி என்கிற சிறுபான்மை என்பது ஏமாற்று என்ற அனார்க்கிச கருத்தை கொண்டிருந்தனர். Anarchism is ORDER without Government என்பது அவர்களது விளக்கம்.. முதலாளித்துவத்தை தூக்கி எறிந்து சோசலிசம் நோக்கிய கட்டுமானத்தில் ஆரம்பத்தில் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் எனும் அரசு தேவை என்கிற கருத்தை பகுனின் போன்ற அனார்க்கிஸ்ட்கள் ஏற்கவில்லை. மார்க்ஸ் சொன்ன அரசு உதிரும் அதுவரை பாட்டாளிவர்க்க சர்வாதிகார அரசு என்பதை அனார்க்கிஸ்ட்கள் விமர்சித்தனர்.

ஜூலை 14, 1889ல் பாரிசில் சோசலிஸ்ட் ஒர்க்கர்ஸ் சர்வதேச மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. அதில் மார்க்ஸ்- எங்கெல்ஸ் மீது பற்றுக்கொண்டவர்கள் என கருதப்படும் பல தலைவர்கள் பங்கேற்றனர். மார்க்சின் புதல்வி எலியனார் மார்க்ஸ், வில்லியம் லீப்னெக்ட், ரஷ்யாவின் பிளக்கானோவ், மகளிர் தினத்தின் காரணகர்த்தா கிளாரா ஜெட்கின் போன்றவர்கள் பாங்கேற்றனர். எங்கெல்ஸ் வரமுடியவில்லை. கூட்டம் துவங்கியவுடனேயே 8 மணிநேர வேலை குறித்து கவனஈர்ப்பை லீப்னெக்ட் கொணர்ந்தார். கூட்டமுடிவு தினமான ஜூலை 20ல் பிரான்ஸ் தொழிற்சங்கத்தலைவர் ரேமண்ட் லவீ (*Raymond Lavigne)* அடுத்து வருகிற மே1 1890 சர்வதேச தொழிலாளர் ஆர்ப்பாட்ட நாளாக வேண்டும் என்பதை முன்மொழிந்தார். வேலைநிறுத்தமாக வேண்டும் என அனார்க்கிஸ்ட் தோழர்கள் பேசினர். அந்தந்த நாட்டின் சூழலுக்கேற்ப என கருத்தொற்றுமை ஏற்பட்டு தொடர்ந்து மேதினம் தொழிலாளர் ஆர்பாட்ட நாளாக ஆண்டுதோறும் கோடிக்கணக்கான

தொழிலாளர்களால் மே முதல் நாள் நடத்தப்பட்டு வருகிறது. தமிழர்களுக்கு சிங்காரவேலர் மேதின ஊர்வலத்தை அறிமுகப்படுத்தினார்.

சிகாகோ போராளிகள் விசாரணையின்போது ஆவேசமான கொள்கைசார்ந்த உரைகளை நல்கினர். முதலாளித்துவ முறையின் கோரமுகத்தை அம்பலப்படுத்தினர். சோசலிச முறையின் அவசியத்தை வலியுறுத்தினர். மக்கள் கிளர்ந்து எழுந்து போராடி நியாயம் கேட்டுகொண்டேயிருப்பார்கள் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தினர். அவர்களது உரை நூற்றுக்கணக்கான பக்கங்களை கொண்டவை. இன்றும் அவை நியாயம் கேட்டு போராடும் குரல்களின் பிரதிகளாகளாகவே இருக்கின்றன.

அப்போராளிகள் தூக்கில்தொங்கவிடப்பட்டு 130 ஆண்டுகள் முடிகின்றன. ஆனாலும் சிற்றூர் துவங்கி சிகாகோ எனும் பெரும் நகர்வரை உலகம் முழுதும் மேதின முழக்கங்கள் ஆண்டுதோறும் எழுந்து கொண்டேயிருக்கின்றன.தொழிற்சங்க தலைவர்கள் அமெரிக்கா சென்றால் தங்களின் புனித கடமையாக சிகாகோ மண்மிதித்து வருகின்றனர். மேதின இயக்கம் தொழிலாளர்களின் போராட்டதினமாக அய்க்கிய தினமாக மாறியுள்ளது. ஆனால் போராளிகள் நின்ற அரசியல் மார்க்கமான அனார்க்கிசம் என்னவானது… தொழிலாளிவர்க்கத்திடம் அரசியல் கட்சிகளிடம் ஆங்காங்கே சிறு சிறு வடிவங்களை எடுத்தாலும் பெருமளவு மார்க்சியம் போல் ஒட்டாமல் ஈர்ப்பை கொடுக்காமல் போய்விட்டது. அவ்ர்களை 8 மணிநேர போராட்ட தியாகிகள் என தொழிற்சங்க எல்லைக்குள் சுருக்குவது வரலாற்று திரிபுவாதம் என அனார்க்கிஸ்ட்கள் இன்றும் பேசிவருகின்றனர். அவர்களது இறுதி நிமிடம் இவ்வாறு சித்தரிக்கப்படுகிறது

Their heads hooded their legs bound with leather straps and ropes around their necks they spoke for the last time. Spies called out "The time will come when our silence will be more powerful than the voices you strangle today." "Hurrah for anarchy!" cried Fischer. "Hurrah for anarchy!" shouted Engel even louder. "This is the happiest moment of my life!" exclaimed Fischer. Then Parsons spoke, "Will I be allowed to speak, O men of America? Let me speak, Sheriff Matson! Let the voice of the people be heard! O---." The trap doors opened and four of America's greatest labor martyrs passed into history.

கழுத்தில் சுருக்கு மாட்டப்படுகிறது. அவர்கள் முழங்குகிறார்கள். இன்று எங்கல் குரல்வளை நெறிக்கப்படலாம். ஆனால் எங்களின் மௌனம் பெரும் வலிமையுடன் எழும் காலம் வரும். அனார்க்கிசம் வாழ்க!



சிகாகோவின் இத்தியாகிகள் வாழ்க்கை பற்றியும் மரணத்திற்கு முன்பும்கூட அவர்களது எண்ண ஓட்டங்கள் எவ்வாறு இருந்தன என்பதையும் நாம் அறியவேண்டும்.. அவர்கள் தங்களைப்பற்றியும் தாங்கள் நின்ற கொள்கைக்காக மரணம் பரிசாக வந்தபோதிலும் அது குறித்த பெருமிதங்களையும் சுருக்கமாக தந்து போய் உள்ளனர். அதில் வலியும் வேதனையும் மட்டும் தெரியவில்லை. உயர் கனவும் அதற்கான தவிப்பும் தெரிகிறது.

ஆல்பர்ட் பார்சன்ஸ் (1848-87)

ஆலபர்ட் பார்சன்ஸ் அலபாமா மாண்ட்கோமரியில் ஜூன் 24 1848ல் பிறந்தவர். தந்தை சாமுவேல் பார்சன்ஸ். பெரிய குடும்பம். தாயார் மதப்பற்றுடன் அருகாமை குடும்பங்களில் நல்ல பெயர் பெற்றவர். தந்தை பரோபகாரி என அறியப்பட்டவர். அவருடைய முன்னோர்கள் 300 ஆண்டுகளாக அமெரிக்கவாசிகள். தாய்வழி உறவினர் ஒருவர் ஜார்ஜ் வாஷிங்டனுடன் நின்று போராடியவர். தாய்வழி குடும்பத்திற்கு டாம்கின் குடும்பம் என பொதுப்பெயர். மற்றொரு முன்னவர் மேஜர் ஜெனரல் சாமுவேல் பார்சன்ஸ் 1776 புரட்சியில் காயமுற்றவர்.



ஆல்பர்ட் பார்சன்ஸ் தாய் தந்தை இருவரும் அவருக்கு 5 வயது முடியும் முன்பே மறைந்தனர். மூத்த அண்ணன் பத்திரிகையாளர். சிறுவயதிலேயே ரைபிள், பிஸ்டல் பிடிக்கும் வழக்கம் பார்சன்ஸ்க்கு ஏற்பட்டது. பிரிண்டிங் தொழிலை 7 ஆண்டுகள் பார்சன்ஸ் கற்றார். வர்ஜீனியாவில் கலகப்படை ஜெனரல் லே உடன் சேர விரும்பினார். மூத்தவர் ஒருவர் வயது போதாது என அறிவுரை வழங்கியதால் அது நடைபெறவில்லை. டெக்ஸாஸ் சென்று அண்ணனுடன் இணைந்தார். அங்கு குதிரைப்படை பிரிவில் சேர்ந்தார். அவரின் மற்றொரு சகோதரர் மேஜர் ஜெனரல் பர்சன்ஸ் அதன் தலைமை பொறுப்பில் இருந்தார். 15 வயதில் அவர் படையில் பார்சன்ஸ் இணைந்தார். தனது பண்ணை வருவாயிலிருந்து கல்வி கட்டணம் செலுத்தி வாகோ பல்கலைகழகத்தில் டெக்னிகல் கல்வி பயின்றார். Political Rights of colored People என்பதில் அங்கு உறுதியாக நின்றார். பத்திரிகை ஒன்றை துவங்கி

அதற்காக வாதாடினார். அடிமைகள் பலர் நேயம் கொள்ளத்துவங்கினர். 1869ல் ஹவுஸ்டன் டெலிகிராப் பத்திரிகை நிருபர் ஆனார்.

பார்சன்ஸ் வருவாய் மதிப்பீட்டாளர், டெபுடி கலெக்டர் போன்ற பதவிகளில் அமர்த்தப்பட்டார். அரசாங்க உத்யோகங்களை 1873ல் ராஜினாமா செய்தார். 1872ல் ஸ்பானிஸ் பெண்ணை மணமுடித்து சிகாகோ வருகிறார். 1874ல் தொழிலாளர் பிரச்சனைகளில் ஆர்வம் செலுத்துகிறார். சிகாகோ தொழிலாளர்களுக்கு விபத்து காலங்களில் துயர் துடைக்கும் Relief and Aid Society ஒன்று இருந்தது. அது முறையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி வழங்காமல் பல நிதி முறைகேடுகளை செய்தது. தட்டிக்கேட்டவர்களை கம்யூனிஸ்ட்கள், திருடர்கள், குண்டர்கள் என விமர்சித்தது. பார்சன்ஸ் கணக்குகளை துருவி ஆராய்ந்து சமபந்தபட்ட்வர்களை அம்பலப்படுத்த துவங்கினார். இதைத்தொடர்ந்து தொழிலாளர்களுடன் நிற்பது என்ற முடிவிற்கு வந்தார்.

1876 தொழிலாளர் மாநாட்டு நடவடிக்கைகளை அவர் கூர்ந்து கவனித்தார். அங்கு இருந்த வேறுபாடுகளையும் புரிந்து கொண்டார். அமெரிக்க சோசியல் டெமாக்ரடிக் கட்சியில் அவர் இணைந்தார். ஜூலை 21, 1877ல் 30 ஆயிரம் ரயில்வே தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்து மாடிசன் மார்க்கெட் பகுதியில் திரண்டனர். பார்சன்ஸ் பேச அழைக்கப்பட்டார். தொழிலாளர் வர்க்க கட்சிதான் அவர்களை காப்பாற்றும் என சொல்லி அக்கட்சியின் திட்டத்தை அங்கு பேசினார் பார்சன்ஸ். மறுநாள் அவர் வேலைபார்த்த பத்ரிக்கை அவரை வெளியேற்றியது. மேயர் ஹீத் பார்க்க விரும்புகிறார் என அழைத்து சென்றனர். போலிஸ் அதிகாரி பார்சன்ஸ் இடம் மிரட்டும் தொனியில் கேள்விகளை அடுக்கினார். வேலைநிறுத்தம் என்கிற ஆயுதம்விட ஓட்டு எனும் ஆயுதம் பயன்படுத்தி பொறுப்பானவர்களை தேர்ந்தெடுங்கள் என தான் பேசியதை பார்சன்ஸ் சொன்னார். அவனை லாகப்பில் தள்ளி தூக்கில் போடு என சிலர் அங்கு பேசத்துவங்கினர். சிலமணிநேரத்திற்கு பின்னர் பார்சன்ஸ் அனுப்பபட்டார்.

தலைமை போலிஸ் அதிகாரி 'ஏய் பார்சன்ஸ் உனக்கு எச்சரிக்கை, உடன் இந்நகரைவிட்டு வெளியேறு. நீ செய்வதென்ன என எங்களுக்கு அறிக்கை வந்துகொண்டிருக்கிறது' என மிரட்டி அனுப்பினார். அதிகார ஆட்டம் என்றால் என்ன என்பதை பார்சன்ஸ் அப்போது உணர்கிறார். தனது பத்ரிக்கை அலுவலகத்தில் பார்சன்ஸ் பணிபுரிந்துகொண்டிருக்கும்போது திடிரென ஆட்கள் வருகிறார்கள் அவரது கையை பிணைக்கிறார்கள். துப்பாக்கியைகாட்டி மிரட்டுகிறார்கள். மூளை சிதறிப்போகும். வெளியேறு என்கிறார்கள். கட்டயப்படுத்தி தெருவிற்கு இழுத்து தள்ளுகிறார்கள். பார்சன்ஸ்

தனிமையில் மனம் ஒடிந்துபோனார். அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு அவருக்கு வேலை தரக்கூடாது என Blacklist செய்யப்படுகிறார். அன்றாட வாழ்விற்கே குடும்பத்திற்கு பெரும் கஷ்டம் உருவாக்கப்பட்டது.

1876 ல் அவருக்கு Knights of Labour அமைப்புடன் தொடர்பு எற்படுகிறது. இலியனாயிஸ் மாநிலத்தில் பெரும் சங்கமாக அது உருவெடுத்தது. அந்த அமைப்பில் சில முன்னணி பொறுப்புகளில் பார்சன்ஸ் அமர்த்தப்படுகிறார். சோசலிஸ்ட் லேபர் கட்சியிலும் அவர் முக்கிய தலைவராகிறார். முதலாளித்துவ கொடுமைகள் குறித்தும் ஆட்சியாளர் அராஜகத்திலிருந்து தற்காத்துக்கொள்ள ஆயுதம் ஏந்துதல் போதிக்கப்படுகிறது.

வாக்குப்பெட்டி தேர்தல்கள் வாழ்வை முன்னேற்றாது என்ற முடிவிற்கு சில தொழிற்சங்கங்கள் மற்றும் தலைவர்கள் வந்தனர். தொழிலாளர் நலன்களையும் இயற்கை வளங்களையும் திட்டமிட்டு சுரண்டுவதற்கு அரசாங்கம் என்பது சொத்து படைத்தவர்க்கான சாதனம் என்ற உரைகள் தரப்படுகின்றன. வேலை நேரத்தை குறைப்பதற்கோ, சம்பளத்தை உயர்த்துவதற்கோ இன்றைய அரசியல் உதவவில்லை. எங்கும் லஞ்சம் என்ற கருத்திற்கு பார்சன்ஸ் வந்தார். International Working People's Association, தொழிலாளர் காங்கிரஸ்களில் அவர் பங்கேற்காமல் இல்லை. அறிக்கைகள் தயாரிப்பதில் பிரச்சாரம் செய்வதில் பங்காற்றினார். கார்ல்மார்க்ஸ் உள்ளிட்டோர் துவங்கிய முதலாம் அகிலம் கலைந்தவுடன் அனார்க்கிஸ்ட்களால் துவங்கப்பட்ட IWPAக்கு மானிபெஸ்டோவை ஆல்பர்ட் பார்சன்ஸ், ஸ்பீஸ், ஜோசப் ரெய்ஃப்கிராபர் இணைந்து எழுதியதாக செய்திகள் உள்ளன.

உடைமை வர்க்கத்தின் சுரண்டல், மூலதன குவிப்பு அதன்மூலம் பெறும் அதிகாரம் குறித்து அவர்களது மானிபெஸ்டோ பேசியது. உழைப்பவரை ஓட்டாண்டியாக்கி, குற்ற மனிதர்களை உருவாக்கி, பெண்களை விபச்சாரிகளாக்கி பட்டினியில் வாட செய்யும் இம்முறையை தூக்கி எறிவோம் என பேசினர். இது நியாயமற்ற. பயித்தியக்காரத்தனமான் படுகொலை செய்திடும் சமுக முறை என்று பார்சன்ஸ் பேசத்துவங்கினார். அமெரிக்காவிலும் அய்ரோப்பா முழுமையும் பூர்ஷ்வாக்களுக்கு எதிரான பிராலிடேரியட் போராட்டம் என் பார்சன்ஸ் எழுதினார். நமது அரசியல் நிறுவனங்கள் போலீஸ்கள் சொத்துரிமைக்கு வாலாட்டி விசுவாசமாக இருக்கின்றனர் என்றார்.. FORCE அது ஒன்றே தொழிலாளரை காக்கும் என்றார்.

வர்க்க பாகுபாடுள்ள சமுகம் வீழட்டும். பேதமற்ற சமுகம் படைப்போம். நமது அமைப்புகளை மதசார்பற்ற, விஞ்ஞான மனப்பான்மையுடன் அமையட்டும்.

உற்பத்தி கூட்டுறவு முறையில் ஆகட்டும். ஆண் பெண் பேதமற்ற சம உரிமைகள் மலரட்டும் என்கிற தனது கனவை அவர் சிறையில் இருந்தபோது வெளிப்படுத்தினார். proletarians from all countries Unite என்கிற முழக்கத்தை பிட்ஸ்பர்க் காங்கிரஸ் வைத்தது. 1881 முதலே தன்னை அனார்க்கிஸ்ட் என முதலாளித்துவ பத்திரிகைகள் பெயரிட துவங்கியதாக பார்சன்ஸ் பதிவு செய்கிறார். சர்வதேச அமைப்பின் சார்பில் அலார்ம் என்கிற பத்திரிகை 1884 அக்டோபரில் துவங்கப்படுகிறது. பார்சன்ஸ் அதன் எடிட்டிர் ஆகிறார்.

அனார்கிஸ்ட் என்பதை கெட்டவார்த்தைபோல் தொழிலாளர் சிலரும் புரிந்து கொண்டனர் என்கிற வருத்தம் அவருக்கு இருந்தது. அச்சிந்தனை முறையை அவர் விளக்குகிறார். கிரேக்கப்பதம் An- without arche- government என்பதை அவர் சொல்கிறார். அரசன் இல்லாத, பிரசிடெண்ட் அல்லது தனித்த ஆட்சியாளர் என பிரகடனம் இல்லாத முறை என்கிறார். Government is the agency or power by which some person or persons govern other persons. Power is might, and might always make its own right என்று எழுதினார் பார்சன்ஸ். மூலதனம் என்பது உள்ளுறைந்த உழைப்புதான். அது கடந்தகால உழைப்புதான் என்கிற கருத்திற்கு அவர் வருகிறார். மூலதனத்தின் செயல்பாடு என்பது கூலி உழைப்பாளர்களை சுரண்டி கொழுப்பதுதான். Legalised capital and the State stand or fall together. They are twins என்கிற தனது அரசியல் பொருளாதார பார்வையை பார்சன்ஸ் முன்வைத்தார்.


பாஸ்- பாஸ் இசம் இல்லாமல் மக்கள் கூடிக்கொள்ளவேண்டும். அப்போது சுதந்திரமாக பிரிந்துகொள்ளவும் முடியும். கவர்மெண்டலிசம் என்பதற்கு பதில் சோசியல் அட்மினிஸ்ட்ரேஷன் என்றார் பார்சன்ஸ். No Dictation No Coercion No Domination என்றார். இதெல்லாம் கனவா என்று கேள்வி எழுப்பி சாத்தியம் என விவாதிக்கவும் செய்கிறார். Force என்பதை அனார்க்கிஸ்ட்கள் சொல்லவில்லை என்றும் தடுத்து காத்துக்கொள்ளும் அரண் மட்டுமே என்றும் பார்சன்ஸ் வன்முறை குறித்து விளக்குகிறார். மதமோ அரசியலோ பிரச்சனைகளை தீர்க்கப்போவதில்லை என்றார். அனார்க்கிசம் என்பது மனிதாபிமானம் நிறைந்த ஒன்று என்பதால் வந்தே தீரும் என்கிற நம்பிக்கையை அவர் வெளிப்படுத்தினார். அனார்க்கிஸ்ட் என்பவன் எவரையும் கட்டுப்படுத்த விரும்பாதவன். எவர் கட்டுப்பட்டிற்கும் உட்படாதவன். அவர்கள் மனிதனுக்கு தளையை ஏற்படுத்தும் சங்கிலியை உடைத்து சுதந்திரமாக இரு. மகிழ்ச்சியாக இருப்போம் என்பவர்கள் என்றார் பார்சன்ஸ்.

1886ல் சின்சினாட்டி, ஒகியா கூட்டங்களுக்கு சென்று 8 மணிவேலை இயக்கங்களில் பங்கேற்று மே 4 அன்றுதான் சிகாகோ பார்சன்ஸ் திரும்பினார். பார்சன்ஸ் துணவியார் தையல் தொழிலாளர்களை திரட்டிக்கொண்டிருந்தார்.

அன்று மதியம்தான் ஹேமார்க்கெட் கண்டனகூட்ட செய்தி அவருக்கு சொல்லப்படுகிறது. முதல்நாள் மெக்கார்மிக் போலீஸ் தாக்குதலை அவர் அறிகிறார். இரவு வேறு ஒரு கூட்டத்திற்கு போகவேண்டியிருப்பதாலும், மெக்கார்மிர்க் போலீஸ் உதவியுடன் கூட்டத்தை கலைத்துவிடுவர் என்பதாலும் தான் வரவில்லை என்ற செய்தியைத்தான் அவர் முதலில் அனுப்புகிறார். பார்சன்ஸ் குடும்பத்தார் 6 வயது மகன், 4 வயது மகளுடன் வெளியே இரவு 8 மணிக்கு வருகின்றனர். டைம்ஸ் பத்ரிக்கை நிருபர் கூட்டத்திற்கா என்கிறார். நான் பேசப்போகவில்லை என்றே பார்சன்ஸ் பதில் தருகிறார்.

அமெரிக்கன் குரூப் ஆப் இண்டெர்னேஷனல் கூட்டத்திற்கு வாடகை காரில் குடும்பத்தார் பயணிக்கின்றனர். இரவு 9 மணிக்கு ஸ்பீஸ் மட்டும்தான் இருக்கிறார். கூட்டம் அதிகமாக இருக்கிறது. வரவேண்டும் என்கிறார்கள். நடந்துகொண்டிருக்கும் கூட்டத்தை ஒத்திவைத்துவிட்டு அங்கே விரைகிறார் பார்சன்ஸ். கூடியிருந்தவர்களிடம் கருத்துக்களை வைக்கிறார். முடிக்கும் தருவாயில் பீல்டன் வருகிறார். பார்சன்ஸ் இறங்கி மனைவி குழந்தைகள் இடத்திற்கு வந்து அமர்கிறார்.

மழை துவங்கியது. கூட்டம் கலைய ஆரம்பிக்கிறது. பெரும் சத்தம் கேட்கிறது. போலீசார் சுடத்துவங்குகின்றனர். கலவர பூமியாகிறது ஹேமார்க்கெட். வழக்கு போடப்படுகிறது. ஆரம்பத்தில் தப்பி சென்றாலும் சரண் அடையத்தயார் எனும் செய்தியை பார்சன்ஸ் அனுப்புகிறார். சரண் அடைகிறார். எடுத்துவைக்கப்பட்ட நியாயங்கள் ஏதும் எடுபடவில்லை. சம்பவத்திற்காக அல்லாமல் அவர்கள் கொண்ட சித்தாந்தத்திற்காக தூக்கு தண்டனை விதிக்கப்படுகிறது. சுதந்திரபூமி எனப்பட்ட அமெரிக்காவில் எண்ணங்களுக்கு சவகுழிகள்தான் போலும். பார்சன்ஸ் பொறுத்தவரை கூட்டத்தில் குண்டு எறிந்தவன் நியுயார்க் நகரத்திலிருந்து ஏற்பாடு செய்யப்பட்டவன் . கூட்டப்பகுதியிலேயே இல்லாத மற்றவர் மீது வழக்கு தண்டனை ஏன் என்ற கேள்வியை பார்சன்ஸ் எழுப்பினார்.



பார்சன்ஸ் துணைவியார் லூசி பார்சன்ஸ் தன்னளவில் புகழ்வாய்ந்த புரட்சியாளராக இருந்தவர். அவரும் அனார்க்கிசத்தில் ஈர்ப்புகொண்டு உரையாற்றி வந்தவர். பத்திரிகைகளில் எழுதியவர். அவர் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார் என்றும்- இல்லை என்றும் அவரைப்பற்றி முரண்பட்ட தகவல்கள் இருக்கின்றன. லூசிதான் சிகாகோ தியாகிகளின் உரைகளை தொகுத்து வெளியிட்டார். 1911ல் பத்தாயிரம் காப்பிகள் அத்தொகுப்பு விற்றுவிட்டதாகவும், அடுத்த 6வது பதிப்பில் 12000 புத்தகங்கள் கொணரப்போவதாகவும் லூசி தெரிவித்திருந்தார். லூசி தன் இரு குழந்தைகளுடன் கடைசியாக கணவருக்கு விடைகொடுக்கலாம் என பார்சன்ஸ் தூக்கில் ஏற்றப்படும் நாளின் காலையில் பார்க்க சென்றார். குழந்தைகளாவது தந்தையிடம் ஆசி பெறட்டும் என வேண்டினார். அவர்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை. அப்போது அவர் முடிவெடுத்தார்.. வாழ்நாள் முழுதும் போராளியாக தொடர்வேன் என்று. அப்படியே அவர் வாழ்ந்தார். 1942ல் அவர் மறைகிறார்.

என் துணைவி அற்புதமானவர்- தைரியமானவர்- நேர்மையான அறிவிற்சிறந்த குணக்குன்று என்றார் பார்சன்ஸ். ஹேமார்க்கெட் சம்பவம் முதலாளித்துவ அரசின் காட்டுமிராண்டிதனத்தை அரக்கமுகத்தை மக்களுக்கு காட்டிவிட்டது. நம்மை ஒடுக்குவதற்கு அவர்களுக்கு சட்டம் உரிமம் (Law is License) என்றார் பார்சன்ஸ் பேச்சுரிமை கருத்துரிமைக்காக 5 தொழிலாளர் தலைவர்கள் மரணிக்கிறோம் என்றார்.

ஆகஸ்ட் ஸ்பீஸ் (1855-87)

ஆகஸ்ட் வின்செனட் த்யோடர் ஸ்பீஸ் மத்திய ஜெர்மனியில் லாண்டெக் எனும் பகுதியில் 1855ல் பிறந்தவர். தந்தை அரசாங்க காட்டுஇலாகா நிர்வாகி. அவரது குழந்தைப்பருவம் விளையாட்டும் படிப்பும் மகிழ்ச்சியும் நிறைந்த ஒன்று ஆனால் பாட்டாளி வீட்டு குழந்தைகளுக்கு என்ன கிடைக்கிறது என்ற கேள்வி அவருக்கு ஏற்பட்டது. அமெரிக்காபோல் எங்கள் நாட்டில் அவ்வளவு கொடுமையை தான் பார்க்கவில்லை என்கிற பதிவையும் அவர் தருகிறார்.



ஸ்பீஸ் பாலிடெக்னிக்கில் சேர்கிறார். அவருக்கு 17 வயதாகும்போது தந்தை இறக்கிறார். குடும்பத்தை காப்பாற்றவேண்டும் என்கிற பொறுப்பில் மரஇருக்கைகள் வியாபாரத்திற்காக நியுயார்க் 1872ல் ஸ்பீஸ் வருகிறார். அவரின் பணக்கார உறவினர் சிலரை நம்பித்தான் அவர் வருகிறார். அடுத்த ஆண்டு அவர் சிகாகோ வந்து அங்கேயே தங்குகிறார். சோசலிஸ்ட்கள் பற்றி அப்போது அவருக்கு ஏதும் தெரியாது. மற்றவர்களைப்போலவே வேலைவெட்டி இல்லாதவர்கள் மக்களை பிரிப்பவர்கள் என்றே அவரும் கருதினார் . நமது பிரச்சனையே பெரும் இயக்கங்களைக்கூட தனி மனிதரின் சாதனையாக்கிவிடுவோம் என்கிற ஸ்பீஸ் அப்படித்தான் மதத்தலைவர்களையும் ஆக்கினோம் என்கிறார். லுத்ரன் கிறிஸ்துவ இயக்கம் பற்றி குறிப்பிடுகிறார். அவரது ஊர் ஜெர்மனியிலும் பிரான்சிலும் 1000 ஆண்டுகளாக வரலாறு எப்படிப்போனது என்பது குறித்தும் ஸ்பீஸ் பேசுகிறார்.

அன்றாடம் பார்க்கும் உழைப்பாளர்கள் கூனி குறுகி வேலைக்கு இறைஞ்சுவது, அடிமைத்தன்மையை காட்டுவது ஏன் என்கிற கேள்வி ஸ்பீஸ்க்கு உருவானது. அவருக்கு தனிப்பட்ட வாழ்க்கையில் பிரச்சனை ஏதும் அப்போது இல்லை.

சற்று கூடுதலாக கவனம் செலுத்தினால் மேம்பட்ட வியாபாரியாக அவர் வரக்கூடிய சூழல்தான் இருந்தது. கிறிஸ்துவம் பேசுகின்ற துறவு இயற்கைக்கு விரோதமானது , வாழ்க்கையின் நோக்கம் மகிழ்ச்சியாக இருப்பது என்பதுதான் என்கிற கருத்து ஸ்பீஸ்க்கு உருவானது.

அதுவரை சோசலிசம் குறித்து எதையும் படித்து அறியாமல் இருந்த ஸ்பீஸ் கிரேக்க சிந்தனையாளர்கள், கார்ல்மார்க்ஸ் பற்றி அறியத் துவங்குகிறார். 1875ல் இலியனாயிஸ் தொழிலாளர் கூட்டத்திற்கு நண்பர் ஒருவர் அழைக்க ஸ்பீஸ் போகிறார். அங்கு சோசலிசம் குறித்து பேசியதை கேட்டார். ஆர்வம் உந்தி ஏராள புத்தகங்களை வாங்கினார். பிரஞ்சு, ஜெர்மன், ஆங்கில பொருளாதாரவாதிகள், சமுக விஞ்ஞானிகள் எழுதியதை கற்க துவங்கினார். பக்கில் எழுதிய நாகரிகத்தின் வரலாறு, மார்க்சின் காபிடல், மார்கனின் பழங்கால சமுதாயம் ஆகியவை அவரை பாதித்தன. ஸ்பீஸின் மரச்சாமான் கடை 7 ஆண்டுகளில் வியாபார முன்னேற்றம் கண்டது. தாயார் சகோதரர்கள் இவருடன் வந்து குடியேறுகிறார்கள்.


1877ல் ஸ்பீஸ் சோசலிஸ்ட் கட்சியில் இணைகிறார். ஆயுதம் ஏந்தும் குழுவில் தன்னை இணைத்துக்கொள்கிறார். தன்னைப்போல மிக ஒழுங்குடன் பயிற்சி எடுத்துக்கொண்டவர்கள் 1500 பேர்கள் இருந்ததாக ஸ்பீஸ் தனது குறிப்பில் சொல்கிறார். அரசியல் வேலைகளையும் அவர் செய்துவந்தார். ஆனால் அவை பிரச்சாரத்திற்கு உதவுகிறதே ஒழிய தீர்விற்கு மாற்றத்தை கொணர்வதாக இல்லை என்பதை அவர் உணர்ந்தார். 1880ல் அர்பெட்டர் ஜெய்டுங் என்கிற ஜெர்மன் தொழிலாளர் வாரப்பத்திரிகையுடன் தன்னை இணைத்துக்கொள்கிறார். Knights of Labour உறுப்பினராக மூன்று ஆண்டுகள் அவர் இருந்தார். பின்னர் புதுப்பித்துக் கொள்ளவில்லை. ஆனால் அவர்கள் கூட்டங்களுக்கு அழைக்கும் போதெல்லாம் சென்றார். உரைகள் நிகழ்த்தினார். புரட்சிகர சோசலிஸ்ட் கட்சி மாநாடுகள், சர்வதேச தொழிலாளர் சங்க மாநாடுகள் ஆகியவற்றில் பங்கேற்றார்

ஹேமார்க்கெட் மே 4 நிகழ்வை பொறுத்தவரை அவர் கூட்டத்திற்கு பேச அழைக்கப்பட்டார் என்பதை தாண்டி எந்த தொடர்பும் இல்லை . ஜெர்மன் மொழியில் பேசத்தான் அவர் அழைக்கப்பட்டிருந்தார். ஆங்கில பேச்சாளர்கள் அப்போது யாரும் இல்லாததால் அவர் ஆங்கிலத்தில் உரையாற்றவேண்டியிருந்தது. அக்கூட்டத்திற்கு பலதரப்பட்ட தலைவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். அனார்க்கிஸ்ட்கள் மட்டுமல்ல. அங்கு பேசியவர்கள் கூட 8 மணி வேலையை வற்புறுத்தி மட்டுமே பேசினர். அனார்க்கிச சித்தாந்தம் பற்றி தான் பேசவில்லை என ஸ்பீஸ் தனது குறிப்பில் வெளிப்படுத்துகிறார்.

எங்களை தூக்கில்போடப்போகும் மனிதரும் மக்களும் இதை தெரிந்து கொள்ளவேண்டும் என்றார். ஸ்பீஸ். எங்களை காட்டுமிராண்டிகள், பயங்கரவாதிகள் சமுகத்திற்கு தீமையானவர்கள் என காட்டி அவர்களது எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்கின்றனர் என்றார் ஸ்பீஸ். மனிதகுல மேம்பாடு எனும் காரணத்திற்காகவும் அதன் ஒளிக்காகவும் எப்போதும் நிற்பான் ஸ்பீஸ் என்றார் அவர். தனது தியாக வாழ்க்கையின் மூலம் நம்மால் பேசப்படும் மனிதராகியுள்ளார் ஸ்பீஸ்.

அடால்ப் பிஷர் (1858-87)

அடால்ப் பிஷர் ஜெர்மனியில் மிக முக்கிய வர்த்தக நகரான ப்ரெமெனில் 1858ல் பிறந்தவர். மற்ற சாதாரண குழந்தைகளைப்போன்றே தனது வாழ்க்கையும் துவங்கியதாக பிஷர் தெரிவித்தார். பள்ளிப்படிப்பை 9 ஆண்டுகள் படித்துவிட்டு தனது 15 ஆம் வயதில் அவர் அமெரிக்கா சென்றார். தனது சகோதரருடன் பிரிண்டிங் பிரஸ் ஒன்றில் கம்போசர் பணியில் சேர்ந்தார். அவர்கள் ஜெர்மன் வாரப்பத்திரிகை ஒன்றையும் கொணர்ந்தனர். பின்னர் விதி தன்னை 1883ல் சிகாகோ அழைத்து சென்றதாக குறிப்பிடுகிறார் பிஷர்.



1879 முதல் ஜெர்மன் டைபோகிராபிகல் சங்கத்தில் அவர் இருந்தார். திருமணம் மூன்று குழந்தைகள் என அவரின் வாழ்க்கை நகர்ந்து கொண்டிருந்தது ஜெர்மன் பத்திரிகை அர்பெய்ட்டர் ஜெய்டுங்கில் கம்போசாராகவும் இருந்தார். சிறிய வயதில் இருந்தே சோசலிச கொள்கைகள் குறித்த செய்திகளால் ஈர்க்கப்பட்டிருந்தார். ஜெர்மனியில் படிக்கும் காலத்தில் வரலாற்று ஆசிரியர் சோசலிசம் குறித்து விளக்குவார். எதிர்மறை கருத்துக்கள்தான் அவர்களுக்கு சொல்லித்தரப்பட்டன. பிரஞ்சுக்காரர்களை காலிகள் என ஆசிரியர்கள் திட்டிவந்தனர். கஷ்டப்பட்டு உழைத்து செல்வம் சேர்த்தவர்களிடமிருந்து சோம்பேறிகள் தட்டிப் பறிக்க நினைக்கிறார்கள் என்கிற கருத்தும் சோசலிஸ்ட்கள் பற்றி சொல்லித்தரப்பட்டது..

ஆசிரியர்கள் பேசியதை தந்தையிடம் கேட்டபோது அவர் பல மாளிகை வீடுகளை காட்டி இவர்கள் அனைவரும் எவ்வித உழைப்பு இல்லாமலும் நன்றாக சுகபோகங்களுடன் வாழ்பவர்கள்-சோசலிஸ்ட்கள் பற்றி பள்ளிக்கூடம் சொன்ன கருத்து தவறு என தந்தை தெளிவுபடுத்தினார். தேனீக்கள்போல்

சுறுசுறுப்பாக இயங்கி பொழுதெல்லாம் உழைப்பவர்கள் தங்களுக்கு என்று மிக குறைந்த வசதிகளையே பெறுகிறார்கள் என்பதை பிஷர் உணரத்துவங்கினார். நான் தவறா? இவ்வுலகம் தவறாக உள்ளதா என்ற கேள்வி தன்னை அலைக்கழித்ததாக பிஷர் குறிப்பிடுகிறார்,

தொழிலாளர்கள் தங்கள் நிலைகளை ஏன் உணராமல் இருக்கிறார்கள்- தங்கள் சூழல் குறித்து கோபமடையாமல் கெஞ்சும் நிலையில் இருக்கிறார்கள் என்பது அவரை தொந்திரவு செய்தது. பிஷரின் உறவுக்கார இளைஞன் தனது மில்லியனர் சர்க்கரை ஆலை அதிபர் குறித்து பெருமையாக பேசுவார். அவர் ஆயிரக்கணக்கானவர்க்கு வேலை கொடுத்த வள்ளல் என்பார். தொழிலாளர் மூலையெல்லாம் இப்படி மோல்ட் செய்யப்பட்டுள்ளதே என பிஷர் நினைக்கத் துவங்கினார்- oh stupid fools slaves என வாய்விட்டு கத்த துவங்கினார்- human drones எனும் பதத்தை பிஷர் பயன்படுத்துகிறார். வாழ்க்கை எனும் பள்ளியிலே உழைப்பவர்கள் கற்று முன்னேறுவதை ஆள்பவர்கள் விரும்பவில்லை என்பது அவரை உறுத்த துவங்கியது.

வியர்வை சொட்ட வேலை செய்- மண்டியிட்டு வணங்கு- அமைதியாக கீழ்ப்படி என்பதைத்தான் கடவுளும் விரும்புகிறாரா என கேள்வி எழுப்பினார் பிஷர். Good, honest, law abiding என தட்டிக்கொடுத்து அவர்கள் சுரண்டுகிறார்கள் என்பது தெரியவில்லையா என்றார். கூலிஅடிமை சுரண்டல் என்கிற அரசியல் பொருளாதாரம் பேசினார். இந்த ஏழை குரங்குகள் எதுவும் அறிந்து கொள்ளாமல் இப்படி உழைக்கின்றனவே என்ற கடுங்கோபம் அவரிடம் இருந்தது.

மெத்தபடித்த பத்திரிகையாளர்கள் அனார்க்கிசம் குறித்து தவறாக சித்தரிக்கிறார்கள் என்றார் பிஷர். அது சுரண்டலை வேரடி மண்ணோடு சாய்க்கும் முறை என்றார். IWPA சர்வதேச உழைப்போர் மாநாடு பிட்ஸ்பர்க்கில் அக்டோபர் 1883ல் கூடியது. மாநாடு மாற்றத்திற்காக முன்னெடுத்த மானிபெஸ்டோவை பிஷர் மக்களிடம் எடுத்துரைத்தார். சுதந்திர சமூகம், மதசார்பற்ற சமுகம் ஆண் பெண் நிகரான சமூகம், அரசாங்கமற்ற சுய ஒழுங்கு, மக்கள் கம்யூன்கள் மூலம் சகலவகை ஒத்துழைப்பு உறவுகள் என மாநாடு பேசியதாக பிஷர் விளக்கினார்.

கிறிஸ்துவம் என்பது எப்படி பொதுவான ஒன்றாக கத்தோலிக்கர், லுத்ரன், பாப்டிஸ்ட் என்கிற பிரிவுகளின் பொதுப்பெயராக இருக்கிறதோ அப்படித்தான் சோசலிசம் என்பதும் பொதுவான சொல். அனார்க்கிசமும் சோசலிசம் படைக்கவே விழைகிறது. சோசலிஸ்ட்கள் எல்லாம் அனார்க்கிஸ்ட்களாக இல்லாமல் இருக்கலாம் ஆனால் அனார்க்கிஸ்ட் என்றால் அவன் சோசலிஸ்ட்

என புரிந்துகொள்ளவேண்டும் என்றார் பிஷர். சோசலிச பொருளாதார அனார்கிஸ்ட்கள் (communistic anarchists- politically anarchists, economically communists socialists) என்று தங்களை பார்க்கவேண்டும் என பிஷர் விளக்கினார். Abolition of political authority-State என்பதற்கு அனார்க்கிஸ்ட்கள் பாடுபடுவதாகவும் எந்த வர்க்கமாக இருந்தாலும் (உழைக்கும் வர்க்கத்தின் பெயரில் இருந்தாலும்) பிறரை ஆள அனுமதியில்லை என்கிற நிலைப்பாட்டை அவர்கள் கொண்டிருந்தனர். Communistic- cooperative method of production என்கிற பொருளாதார ஏற்பாட்டை அவர் விளக்குகிறார்.

அனார்க்கிஸ்ட்களில் புகழ் வாய்ந்த பிரௌதானிடமிருந்து தாங்கள் எங்கு வேறுபடுகிறோம் என்பதையும் பிஷர் சுட்டிக்காட்டுகிறார். சமுக ஜனநாயகவாதிகள் பேசும் அரசு சோசலிசம் என்பதை அனார்க்கிஸ்ட்கள் ஏற்பதில்லை என்றார் பிஷர். அனார்க்கிசம் என்ன என்பதை அவர் விளக்குகிறார். He who rules is a tyrant, and he who submits is a slave என்பது தங்கள் கருத்து என்றார் பிஷர். மனிதர்கள் பிர மனிதர்களை பெரும்பான்மை விருப்பம் என்கிற பெயரில் ஆள்வதென்பதெல்லாம் இயற்கைக்கு விரோதமானது என்பதில் அனார்க்கிஸ்ட்கள் உறுதிபட நின்றனர்.

பிஷர் தனது வழக்கில் தண்டனை பெற்று தாங்கள் எதற்காக நின்றோம் அது குற்றமா என்கிற விவாதத்தில் மேற்கூறிய கருத்துக்களை முன்வைத்தார். Yes, the anarchists demand the reinstallation of the disinherited members of the human family. Natural, that the priveleged classes hate us என எழுதினார் பிஷர். அனார்க்கிஸ்ட்களைப் பார்த்து பாமரத்தனமாக யார் நம்மை ஆள்வது அவரவர் தனியன் என்றால் எப்படி என கேட்கிறார்கள். இது தவறு. மனித இயல்பே உறவாடிக்கொள்வது தான், அது சுதந்திர விருப்பம் சார்ந்து இருக்கவேண்டும் என்கிறார் பிஷர். legalised property system என்கிற முதலாளித்துவ சுரண்டல்முறை ஒழிப்பு என்பதையும் அவர் பேசுகிறார்.

அனார்க்கிஸ்ட்கள் தாங்கள் விழையும் சமுகத்தை எப்படி நடைமுறைக்கு கொணரமுடியும் என்பதற்கு ஏராள விளக்கம் அளிக்கப்பட்டு இருந்தாலும் தான் அனார்க்கிசம் மீது மிக நம்பிக்கையுள்ளவன் என்கிற வகையில் அதை விளக்குவதாகவும் பிஷர் எழுதுகிறார்.

ஹேமார்க்கெட் சம்பவத்தன்று என்ன நிகழ்ந்தது என்பதையும் அவர் எடுத்துரைக்கிறார். மே 3 1886 மெக்காமிர்க் போலீஸ் தாக்குதலை கண்டித்து 4 ஆம் தேதி கூட்டம் ஏற்பாடு செய்யப்படுகிறது. அதற்கான அறிக்கைகளை பிஷர் வெளியிடுகிறார். கூட்டம் மிக அமைதியாக நடந்தது குறித்தும் பீல்டன் பேச வருகையில் மழை வந்து மக்கள் பக்கத்து அறைக்கூடம் ஒன்றில்

ஒதுங்க துவங்குவதையும் பிஷர் சொல்கிறார். zepf saloon என்கிற இடத்தில் தான் இருந்ததாகவும் பார்சன்ஸ் கண் பார்வையில் இருந்ததையும் அவர் குறிப்பிடுகிறார். சத்தம் கேட்கிறது. அச்சலூன் பூட்டப்படுகிறது, போலீசார் சுடுகின்றனர். சலூனுக்குள் புல்லட்களின் சத்தம் கேட்கிறது 15 நிமிடங்கள் உள்ளேயே அவரும் நண்பர்களும் இருக்கின்றனர்.. அடுத்தநாள் காலை 10 மணி அளவில் அர்பெய்ட்டர் ஜெய்டுங் பத்திரிகை அலுவலகத்தில் பிஷர் கைது செய்யப்படுகிறார்.

மேயர் ஹாரிசன், போலீஸ் போன்பீல்ட் ஆகியோர் குறித்தும் அவர் பதிவுகளை தருகிறார். அக்குண்டுவெடிப்பு நிகழ்வில் சம்பந்தப்படாத தனக்கு தூக்குத் தண்டனை வழங்கிய நீதிமுறையை அவர் கேலி செய்து பேசுகிறார். குண்டுவெடிப்பின்போது தான் சலூனில் இருந்த சாட்சியங்கள் இருந்தும் தனக்கு மரணதண்டனை தரப்பட்டுள்ளது குறித்து அவர் எழுதினார். Schnaubelt என்பவன் குண்டெறிந்தான்- அது ஏற்பாடு என்பதெல்லாம் தெரிந்தும் தாங்கள் கொண்டிருந்த கொள்கைகளுக்காக வாய் அடைக்கப்படுகிறோம் என்ற உணர்வுதான் பிஷரிடம் மேலோங்கியிருந்தது.

ஆகா அற்புதமான முடிவு. ஏழு போலீஸ்காரர்கள் அச்சம்பவத்தில் இறந்துள்ளனர். ஆகவே 7 பேரை தூக்கில் இட்டு பழி தீர்த்துக்கொள்ளும் சட்ட நடைமுறைகள் என தன் மனவேதனையை கிண்டலாக வெளிப்படுத்தினார் பிஷர். எப்படிபட்ட 7 பேர். இந்த சுரண்டும் முதலாளித்துவ சமுக ஒழிப்பிற்கு குரல் கொடுப்பவர்கள்- ஒவ்வொரு மனிதனுக்கும் சுதந்திரமான வாழ்க்கையை விழைந்தவர்கள்.. அவர்களை சமுகத்திற்கு கேடு விளைவிப்பவர்கள் என சொல்லி மரணதண்டனை தருகிறார்கள் என்று கோபக்கனலை வீசினார் பிஷர்.

தொழில்வகை பொய்யர்களையும், வாடகை எடிட்டர்களையும் முதலாளித்து ஊதுகுழல் மீடியாக்களையும், உண்மையை நசுக்குபவர்களையும் எதையும் ஏற்க செய்வது கடினமானது. ஆனால் நேர்மையான பத்திரிகையாளர்களே, உழைக்கும் பத்திரிகையாளர்களே அனார்க்கிசம் குறித்து சொல்லப்படும் கட்டுக்கதைகளை அறிவார்ந்த நீங்கள் நம்பாதீர்கள். அதுதான் எங்கள் வழக்கிலும் உள்ளது என்கிற வேண்டுகோளை தனது மரணத்திற்கு முன்பாக முன்வைத்தார் பிஷர்.

எங்களுடைய மரணத்தின் மூலம் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பற்றுடன் அனார்க்கிசம் குறித்து படிப்பார்கள். தெரிந்து கொள்வார்கள் என பிஷர் தன் நம்பிக்கையை பதிவு செய்தார். ஜெர்மனியில் அவர் தந்தை அச்சமற்று இரு என சொல்லிக்கொடுத்தார். அவரின் அறிவுரைக்கு உண்மையாக எங்களுடைய

மரணத்தின் மூலம் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பற்றுடன் அனார்க்கிசம் குறித்து படிப்பார்கள். தெரிந்து கொள்வார்கள் என பிஷர் தன் நம்பிக்கையை பதிவு செய்தார். ஜெர்மனியில் அவர் தந்தை அச்சமற்று இரு என சொல்லிக்கொடுத்தார். அவரின் அறிவுரைக்கு உண்மையாக இருக்கிறேன் நான் என்றார் பிஷர்..

ஜார்ஜ் எங்கெல் (1836-87)

ஜெர்மனியில் காசல் நகரில் ஏப்ரல் 15, 1836ல் பிறந்தவர் ஜார்ஜ் எங்கெல். தந்தை கட்டிடதொழிலில் ஈடுபட்டவர். தந்தை 2 வயது முடிவதற்குள்ளும் தாய் 12வது வயதிலும் இறந்தனர். இரு சகோதரர்கள் அநாதை இல்லம் அனுப்பப்பட்டனர். எங்கெல் உட்பட மற்ற குழந்தைகள் 15 டாலருக்கு விற்கப்பட்டனர். குழந்தையிலேயே வறுமை என்றால் என்ன என்பது பாடமானது.

ஜெர்மனியில் 14 வயதுவரை பள்ளிக்கல்வி, பின் கட்டாய தொழிற்கல்வி என்ற நிலை இருந்தது. தான் தொழிற்கல்வியுடன் ஞாயிறு பள்ளியில் பாடங்களை பயின்றதாக எங்கெல் தெரிவிக்கிறார். அவர் அநாதை என்பதால் எவரும் அவரை பொருட்படுத்தியதில்லை என்கிற சமுக அனுபவம்தான் வாய்த்தது. செருப்பு தைப்பவர் ஒருவர் அவருக்கு மனம் இரங்கி அந்த அரும்கலையை எங்கெலுக்கு கற்றுத்தந்தார்.

இருவார பயிற்சிக்கு பின்னர் தெருவில் விடப்பட்டநிலை. அங்கு வாழ்க்கை கைகூடாத நிலயில் பிராங்க்பர்ட் செல்கிறார் எங்கெல். கையில் காசு இல்லையே வேறு என்ன செய்வது நடந்தே கால் கொப்பளிக்க பிராங்கபர்ட் வந்தடைந்தார். உணவிற்காக அங்கு தென்பட்ட சலூன் சென்று தான் வேலை



செய்ய தயார் உணவு கிடைக்குமா என கேட்க அவர் விரட்டியடிக்கப்பட்டார். அதைப் பார்த்த ஒருவர் மனமிரங்கி வர்ணம் அடிக்கும் தொழிலை கற்றுத் தருவதாக சொன்னார். அந்த எஜமானர் உணவுதந்து தொழிலையும் பழக்கினார்.

பின்னர் 1863ல் ப்ரெமென், மேயென்ஸ், கலோன் ட்ய்யூசல்டிராஃப் போன்ற இடங்களில் சென்று வேலை செய்கிறார். இங்குதான் அவர் ஏராள விஷயங்களை படிக்கத் துவங்குகிறார். 1868ல் ரெக்னா எனும் ஊரில் அவருக்கு திருமணம் நடைபெறுகிறது. அமெரிக்கவில் சென்று பிழைக்கவேண்டும் என்பது அவரின் இளம்வயது கனவு. கனவு கைகூடுகிறது. அவர் 1873 ஜனவரியில் பிலடெல்பியா வருகிறார். அங்கு சர்க்கரை ஆலை ஒன்றில் வேலை கிடைக்கிறது.

தொழிலாளர் போராட்டம், தெருக்களில் ஊர்வலம் என்பதெல்லாம் எங்கெலுக்கு தெரியவருகிறது. ஒருமுறை நிலக்கரி தொழிலாளர் ஊர்வலத்தின்போது தெருவில் நின்ற ஒருவர் காலிகள் என திட்டிக்கொண்டிருந்தார். தூக்கில் போடவேண்டும் என கத்தினர். சிறிய முதலாளி என்கிற வகையில் லேபர் பிரச்சனை எனக்குத்தான் தெரியும் என்றார் அவர். எங்கெலுக்கு குழப்பம் உருவானது, அமெரிக்க சுதந்திர நாடு என்கிறார்களே என அவர் அப்பாவித்தனமாக கேட்கிறார்.

தினம் 10 மணி வேலைப்பார்த்து சம்பளம் பெற்றுவந்த எங்கெல் நோய்வாய்ப்பட்டர். கையில் இருந்த காசு கரைந்தது. மருத்துவம் பார்த்த டாக்டர் ஏழை என அறிந்தவுடன் ஜெர்மன் உதவிமையத்திற்கு அனுப்பிவிட்டார். அந்த சொசைட்டி எங்கெலுக்கு மருத்துவ செலவை ஏற்றது. பின்னர் அவர் சிகாகோ குடிபெயர நேர்ந்தது. 1874ல் ஆலை ஒன்றில் பணிக்கு சேர்கிறார். சிகாகோவில்தான் அவர் சோசலிஸ்ட் ஆகிறார். டெர் வோர்பொட் பத்திரிகை அவருக்கு அங்கு அறிமுகமாகிறது. ஜெர்மன் சோசலிச பத்திரிகையது. அப்பத்திரிகை படிக்க ஆர்வமூட்டியதாகவும் பல விஷயங்களை கற்று தந்ததாகவும் எங்கெல் சொல்கிறார். பின்னர் சர்வதேச உழைப்போர் இயக்கம் பற்றி அறிகிறார். ஜெர்மனியில் மாபெரும் தொழிற்சங்கத்தலைவராக விளங்கிய ஃபெர்டினாண்ட் லஸ்ஸேல் புத்தகம் படிக்க கிடைக்கிறது.

1876ல் அவர் விளையாட்டு சாமான் கடை ஒன்றை வைக்கிறார். தற்போது படிக்க அவருக்கு அதிக நேரமும் கிடைக்கிறது. 1878ல் சோசலிஸ்ட்களுக்கு தடை வருகிறது. அந்நேரத்தில் வட அமெரிக்கா சோசலிஸ்ட் லேபர் கட்சியில் அவர் பணிபுரிந்து வந்தார். தொழிலாளர்களிடம் அக்கட்சி செல்வாக்கு பெறத்துவங்கியது. அக்காலத்தில் மூன்று ஜெர்மன் பத்திரிகைகளான அர்பெய்ட்டர் ஜெய்டுங், வொர்போர்ட், ஃபாகல் வரவேற்பை பெற்று இருந்தன. 1883ல் IWPA பிட்ஸ்பர்க் மாநாடு அனைவரையும் ஈர்த்தது.. அதன் மானிபெஸ்டோவை எங்கெல் உட்பட பலரும் மக்களிடம் எடுத்துச் சென்றனர்.

ஹேமார்க்கெட் சம்பவ தினத்தன்று மே 4 1886ல் வீட்டில் எங்கெல் குடும்பத்தாருடன் சீட்டு விளையாடிக்கொண்டிருந்தார். வாலர் எனும் தோழர் முதல்நாள் சம்பவத்தையும் ஹேமார்க்கெட் கூட்டம் பற்றியும் சொல்கிறார். அவரை வீடு திரும்ப சொல்லிவிட்டு படுக்கைக்கு செல்கிறார் எங்கெல்.

குண்டு வெடித்திராவிட்டாலும் போலிசார் பலரை கொன்றேயிருப்பர் என்ற கருத்தை எங்கெல் பதிவிட்டுள்ளார் . போன்பீல்ட் போன்ற அதிகாரிகள் அங்குள்ள மில்லியனர்களுக்கு லாபம் குவிக்க உதவும் காவலர் என்கிறார். 8 மணி இயக்கத்தை முற்றிலும் துடைத்தெறிய செய்யப்பட்ட சதிதான் வழக்கும் தண்டனையும் என்றார் எங்கெல். எங்கள் எழுவரையும் தூக்கில் போட்டாலும் புரட்சிகர இயக்கங்கள் நின்று போகப்போவதில்லை . போராட்டக்காரர்களால் சிறைகள் நிரம்பும் என்றார். மக்களுக்கு புரியத்துவங்கிவிட்டால் அவர்கள் வன்முறை புரட்சிகளில் வீறுகொண்டு எழுவர் என்றார்.

அடுத்து வருகிற 25ஆண்டுகளில் பெரும் புரட்சிகர யுத்தம் எழும் என்று எங்கெல் நம்பினார். அது இறுதி போராக இருக்கும் என்றார். மக்களுக்கு அமைதியையும் சுபிட்சத்தையும் அப்போர் நல்கும் . பிராலிட்டேரியன் அதை செய்வர் என்று உறுதிபட அவர் நம்பினார். அந்த நம்பிக்கை ஆங்காங்கு சோதனைகளை கண்டுவருகிறது. தடுமாறி விழுகிறது. எழும் என்ற கணக்கில்தான் உலகம் முழுதும் சோசலிச இயக்கங்கள் பலவடிவங்களில் போராடி வருகின்றன. விழுவதும் எழுந்து கற்பதுமாக பயணம் தொடர்கிறது.

லூயி லிங் (1864-87)

லூயி லிங் அவர்கள் செப்டம்பர் 9, 1864ல் மான்ஹெயிம் பகுதியில் பிறந்தவர். முக்கிய ரயில் சந்திப்பு நகரமாக இருந்த பகுதியது. சுவிட்சர்லாந்த் ஆல்ப்ஸ்க்கு அங்கிருந்து ரயில் இணைப்பு இருந்த நடுத்தரமான நகரப்பகுதி. தந்தை பிரடெரிக் லிங் அவர்களுக்கு மரம்வெட்டும் தொழில். தாயாருக்கு சலவைத்தொழில். லிங் குழந்தைப்பருவம் பள்ளிப்படிப்பு மகிழ்ச்சியான காலமாக கடந்தது. தந்தை ஒருமுறை ஐஸ் கட்டிப்பாறையில் மரத்துண்டு ஒன்றை நழுவவிட்டு அதை மீட்க சென்றதால் அத்துடன் சேர்ந்து காணாமல் போனார். அவரை கண்டெடுத்து மீட்டபின்பு செயல் இழந்திருந்தார். மரக்கடை முதலாளி தனக்கு விசுவாசமாக உழைத்த அடிமையை வியாபாரம் மந்தமாகிவிட்டது என சொல்லி அனுப்பிவிட்டார்.

1877ல் லிங் தனது 13 ஆம் வயதில் தந்தையின் மரணத்தைக் கண்டார். சுரண்டல் கொடுமை என்பதை குடும்ப அனுபவத்திலிருந்தே அவர் பெற்றார். இவர் கண் எதிரே அந்த மரக்கடை முதலாளி பெரும் பணக்காரர் ஆனதை பார்த்தார். தாயின் சலவைத்தொழிலிலும் வாடிக்கையாளர்களிடமிருந்து பணம் பெறுவது கடினமாகி வந்தது. பள்ளிபுத்தகம் வாங்கக்கூட பணமில்லாத நிலை ஏற்பட்டது. அப்பரண்டிஸ் தொழில் பழகுநருக்கு அப்போதெல்லாம் சம்பளம் கிடையாது. லிங் அதில் எதையும் பெறமுடியவில்லை. கார்பெண்டர் வேலை



அம்மாவிற்கு பிடிக்கவில்லை. அம்மாவிற்கு ஏதோ அலுவலகத்தில் காப்பிஸ்ட் ஆக அமர்ந்து சிறிய அளவாவது சம்பாதிக்கலாமே என்கிற ஆவல். லூயி லிங் மனநிலை உலகம் சுற்றவேண்டும் என்பதாக இருந்தது.

லிங் ஜெர்மன் தேசிய தொழிலாளர் சங்கத்தில் சேர்ந்தார். புகழ்வாய்ந்த லாஸ்ஸேல் சங்கமது. அங்கு அவர் சோசலிசம்- கம்யூனிசம் குறித்து கற்கலானார். 1883ல் சுவிட்சர்லாந்த் சென்ற லிங் நடந்தே பல பகுதிகளை சுற்றினார். அதன் வனப்பில் லயித்தார். பாசல், பெர்ன் என சென்றார். ஜெனிவா, மௌண்ட்பிளாங் என சுற்றினார். அங்கு வேலை கிடைக்காத நிலைமையால் ஆல்ப்ஸ் மலையடிவாரம் வந்தார். பின்பு ஜூரிச் நகர் வந்தார். சுவிட்சர்லாந்த் மனதுக்கு இதமான பகுதி என்பதால் அங்கு கொடுமையோ வறுமையோ இல்லை என கருதவேண்டாம் என்கிறார் லிங்.

தான் சென்ற பகுதிகளில் அவர் சோசலிஸ்ட்களுடன் தொடர்பு வைத்திருந்தார். அதே நேரத்தில் அங்கு சமுக ஜனநாயகவாதிகளுக்கும் அனார்க்கிஸ்ட்களுக்கும் மோதல் இருந்து வந்தமை குறித்தும் பேசுகிறார் லிங். இந்த வேறுபாடுகளை உணர்ந்த லிங் தன்னால் புரட்சிகர சோசலிஸ்ட்களான அனார்க்கிஸ்ட் பக்கமே நிற்க முடிந்தது என்கிறார். அனார்க்கிஸ்ட்கள் பேசிய 'கம்யூனிஸ்டிக் சோசலிசம்' என்பதை ஏற்றார்.

சென்ற ஊர்கள்தோறும் போலீஸ் கண்காணிப்பு தொல்லைகளால் எங்கும் நீடித்து தங்கமுடியாத நிலை லிங் அவர்களுக்கு ஏற்பட்டது. கட்சி தலைமறைவு வாழ்க்கை சில அனுபவங்களை அவருக்கு கொடுத்தது. கட்சி அனுபவ வாழ்க்கை ஒரு முடிவிற்கு என்னை இட்டுச் சென்றது. மையப்படுத்தப்பட்ட அமைப்பில் பிரதிநிதி என்கிற பெயரில் சிலர கையில் அதிகாரம் நடவடிக்கைகள் குவிந்து ஊழலுக்கும் இறுமாப்பிற்கும் வழிவகுக்கிறது. மற்றொருபுறம் வெகுஜனங்கள் முட்டாள்தனத்திற்கும், அலட்சியமனப்பான்மைக்கும் உள்ளாகிறார்கள் (Party Life experiences led me to the conclusion that in a centralistic organisation, with a representative system, all power and activity is concentrated in the hands of the few, thus inducing them in corruption and imperiousness, while the great masses are inclined to become indifferent and stupid) என 130 ஆண்டுகளுக்கு முன்னரே எழுதியவர் லிங். இதை எழுதும்போது அவருக்கு வயது 22 மட்டுமே. வியந்துபோகச் செய்யும் அனுபவ தெறிப்பு. அவரின் மரணவயதும் அதுவே.

தாயார் மறுமணம் செய்துகொண்டு தனது இரண்டாவது கணவர் மூலம் லிங்கிற்கு பணம் அனுப்பிட ஏற்பாடு செய்தார். அமெரிக்க சென்று வாழ்வது என்ற முடிவிற்கு லிங் வந்தார். பிரான்ஸ் நாட்டின் வழியாக நியுயார்க் பெருநகருக்கு ஜூலை 1885ல் லிங் வந்து சேர்கிறார். அங்கிருந்து சிகாகோ செல்கிறார். சிகாகோவில் சர்வதேச தச்சர்கள் சங்கத்தில் சேர்கிறார். கார்ப்பெண்டர் வேலை செய்கிறார். லிங்கிடம் தொழிலுக்கு வேண்டிய கருவிகள் இல்லை. முதலாளி கருவிகளை தந்து அதற்கு தின சம்பளத்தில்

பிடித்தம் செய்கிறார். இதை குறிப்பிட்டு Noble Boss என லிங் கிண்டல் செய்திருந்தார்.

மரம் அறுக்கும் ஆலையிலும் சங்கத்திலும் பலர் பழக்கமாகின்றனர். பொய் சாட்சியாக பின்னால் வரப்போகும் செலிகெர் என்பவரும் தனக்கு நண்பரானதை லிங் சொல்கிறார், அந்த செலிகர்தான் இவருக்கு அறையில் இடம் தந்து ஒன்றாக தங்க வைத்துக்கொண்டவர். லிங் தொழிற்சங்கத்தில் முன்னணி தலைவராக ஏற்கப்படுகிறார்.

அமெரிக்காவை சுதந்திர நாடு என பலர் வர்ணிப்பதை லிங் விமர்சித்தார். அவர்கள் விவரம் அறியா முட்டாள்கள் என்றார். தான் சிறையில் இருப்பதால் இப்படி சொல்லவில்லை என்றார். இந்த நாடு முதலாளித்துவத்தின் கொடுங்கோன்மை பூமி என்றார். எங்கள் விசாரணை கூத்தைப்பற்றி பேசுவது கடலுக்கு நீர் கொண்டுபோவது போன்ற வீண்வேலை என அவர் நொந்து எழுதினார்.

பள்ளி சூழலிருந்தே தாராள எண்ணப்போக்குகளுடன் வளர்ந்ததால் கடவுள் மதம் அவசியமில்லை என்கிற எண்ணம் அவரிடம் இருந்தது. அவர் தன்னை இயற்கையான சுதந்திர சிந்தனையாளர் என்றே குறிப்பிட்டுக் கொள்கிறார். பெரிய சிந்தனையாளர்களுடன் தான் உழன்றதாகவும், மேலும் உயர் சிந்தனைகளுடன் நடைபோடமுடியும் என்றார் லிங். தூக்கு தண்டனைக்கு முதல்நாள் அவர் தற்கொலை செய்து மரித்துப்போகிறார். கனவுடன் அமெரிக்கா வந்த இளைஞனை அவன் கொண்டிருந்த கருத்துக்களால் அப்பூமி கொன்று போட்டுவிட்டது. நம்மையெல்லாம் போல் வாழ்வின் கட்டங்களை பார்த்து அனுபவிக்க முடியாமல் அவனது வாழ்வின் பயணத்தை நிறுத்திவிட்டனர். தூக்குமேடை ஏறிய தியாகிகளுடன் லிங்கும் பேசப்பட்டுக் கொண்டேயிருக்கிறார்.

Visit www.pattabiwrites.in

Give Your feedback : pattabieight@gmail.com